ஈழமுரசு
Redacteur: K. Jeisanthar
Editor in chief: K. Jeisanthar
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

அனைத்து தொடர்புகளுக்கும்:
MAISON DES MEDIAS
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE **Gratuit**
22, Rue Perdonnet,
75010 Paris, France
Tel: 00 33 1 40 05 95 15
Fax: 00 33 1 40 05 95 16
இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-eelamurazu@gmail.com
விளம்பர விநியோக தொடர்புகட்கு:
E.Mail-eelamurazuadm@gmail.com

Impression / Printer:
News Fax International
Unit 16, Bow Industraial Park
London E15 2DZ

பிரித்தானியா:
Eelamurasu Weekly
E.Mail-eelamurazu.uk@gmail.com
078 8679 0198
MOHAN

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH - 101 613
46016 OBERHAUSEN
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104

கனடா:
2390 Eglinton ave east #230,
Toronto, ONT M1K 2P5.
Tel: 416 752 4846 / 416 8573 941
Fax: 416 752 4136

அவுஸ்திரேலியா:
P.O Box 1327
Glen Waverley
Victoria 3150
Tel: 61 3 8802 8368
Fax: 61 3 9803 4932

சந்தா விபரம்
(அஞ்சற் செலவு மட்டும்)
வருட சந்தா
பிரான்ஸ் 60€
ஐரோப்பா 65€
ஏனைய நாடுகள் 70 €

குறிப்பு:
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

CENTRE DE BEAUTE INDIEN

தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்.
தொடர்புகளுக்கு : பாலன்
33, rue Philippe de Girard
75010 Paris, M° : La Chapelle.
Tel : 06 63 01 75 80

# தமிழீழத் தனியரசின் அச்சை விட்டு விலகியோடும் தேர், தெருவிலேயே நின்றுவிடும்!

**பிரித்தானியாவின் நாடாளுமன்ற வளாகத்தினுள்ளே உலகத் தமிழர் பேரவை உருவாக்கம் பெற்றது சிறீலங்காவின் இன அடக்குமுறைக்கு ஒரு சவாலாகவே அமையும். இந்த ஏற்பாட்டிற்கு எதிராக சிறீலங்கா இன அழிப்பு அரசாங்கம் தம் எதிர்ப்பையும் அதிர்ச்சியையும் வெளிக்காட்டத் தவறவில்லை.**

தமிழர்களின் அரசியல் ஒழுங்கமைப்புக்கள் தமிழர் நலன்களுக்காகவும் தமிழரின் சுய அரசியலுக்காகவும் தமிழர்களின் சமூக, கலாச்சார காவலர்களால் மட்டுமே ஏற்படுத்தப்படல் வேண்டும். அந்த அரசியல் அமைப்புக்களானது தமிழர்களுக்கான தனித் தேசத்தை உருவாக்கும் போராட்டத்திலேயே தம்மை ஈடுபடுத்தல் வேண்டும். எந்தப் போராட்டப் பின்னடைவுகளாலும் தயங்கி நிற்காது தடைகள் தாண்டி முன்னேறவேண்டும்.

முள்ளிவாய்க்கால் இராஜதந்திரங்களை முட்டுக்கட்டைகளாக நினைப்பவர்களின் சதி வலைகளை முறியடித்து இன்றைய தமிழர் அரசியல் முன்னேற வேண்டும். எமது அரசியல், சமூக, பொருளாதார அமைப்புக்கள் அனைத்துமே ஜனநாயக வழிமுறைகளை அதன் வெளிக்கட்டமைப்பிலும் தேசிய விடுதலையை அதன் ஆணி வேரிலும் மிக அழுத்தமாய் உறுதியாய்க் கொண்டிருத்தல் வேண்டும்.

இது இன்றைய தாயகத்தில் நடத்தப்படும் தேர்தல் அரசியலையும் மேவி அதன் மீதான தனது தேசிய விடுதலையை ஆணித்தரமாகச் சொல்லவேண்டும். தன் இயங்கு நிலையின் ஆளுமையை தேசியத் தாகத்தை சர்வதேச முட்டுக்கட்டைகளை மீறி செயற்படுத்த வேண்டும். இதுவே தாயக, புலம்பெயர் தமிழர்களின் அரசியல் தேவையாகும்.

சிறீலங்காவிற்கு துணைபோகும் நாடுகளின் அபிவிருத்தி என்ற போர்வையிலான இன வெறியையும் சிங்கள பௌத்த தேசிய வாதத்தையும் ஊக்குவிக்கும் நிதியுதவிகளை நிறுத்த சர்வதேச அளவில் தனது ஆளுமையை இவ் அமைப்புக்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். வெறுமனே ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவுமின்றி தேசிய விடுதலையின் மீதான நம்பிக்கைகளை உடைத்து அபிவிருத்த என்றும் மேம்பாடு என்றும் தமிழர் இருப்பின் மேலேயே சந்தேகம் கொள்ளும் நடவடிக்கை எமை நசுக்க முயலும் ஆசியக் கூட்டுச் சக்திகளின் வலயமைப்பில் அசைவியக்கம் கொண்டு புலம்பெயர்ந்த தமிழர்களைக் குழப்பும், திசை திருப்பும் நடவடிக்கைகளை எந்த அமைப்புக்களும் மேற்கொள்ள அனுமதிக்க முடியாது.

தமிழர் பேரவைகள் தமது அரசியல் களங்களில் விரிவடையவைத்து அதன் வீச்செல்லைகளை உயரே கொண்டு செல்லும் வேளையில் அதன் செயற்பாடுகளை ஊக்குவிக்க தமிழர் சமூகம் சிந்திக்க வேண்டும். எமைக் காலனித்துவப்படுத்தி ஆண்டு, எமது ஆட்சி உரிமைகளைப் பறித்த பிரித்தானிய அரசாங்கமே இன்று புலம்பெயர் தமிழர்களின் போராட்ட நியாயங்களைப் புரிந்துகொண்டு பங்கேற்கத் தொடங்கியுள்ளன. உலகத் தமிழர் பேரவையின் உருவாக்கத்தில் பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் கலந்துகொண்டதும், பிரித்தானியப் பிரதமர் அவர்களைச் சந்தித்ததும் எமது விடுதலையை நோக்கிய பயணத்தில் முக்கிய திருப்புமுனைகளாகும்.

இது தாயகத் தமிழர்கள் இன்று இழந்து நிற்கும் தாயக விடுதலைக்கான அரசியல் இடைவெளியை நிரப்பும். பிரித்தானியாவின் நாடாளுமன்ற வளாகத்தினுள்ளே உலகத் தமிழர் பேரவை உருவாக்கம் பெற்றது சிறீலங்காவின் இன அடக்குமுறைக்கு ஒரு சவாலாகவே அமையும். இந்த ஏற்பாட்டிற்கு எதிராக சிறீலங்கா இன அழிப்பு அரசாங்கம் தம் எதிர்ப்பையும் அதிர்ச்சியையும் வெளிக்காட்டத் தவறவில்லை. ஆனால், சிறீலங்கா, நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வேளையிலும் ஈழத் தமிழர் போராட்டம் ஜனநாயக வழியில் உறுதியடையத் தொடங்கும் வேளையிலும் சர்வதேசப் பிணக்குகளுக்கான அமைப்பு (ICG) தனது அறிக்கையில், ஈழத் தமிழர்கள் என்று அழைத்து வந்த பதத்தை சிறீலங்கா தமிழர் என அடையாளம் காட்டத் தொடங்கியுள்ளது. ஈழத் தமிழர் போராட்டங்களையும் ஜனநாயக நடவடிக்கைகளையும் புலிசார் நடவடிக்கைகளாக காட்டவும் முயல்கின்றது. தமிழீழத் தனியரசு என்பது விடுதலைப் புலிகளுக்கு முன்னரே தமிழ் மக்களால் ஒருமித்து எழுப்பப்பட்ட குரலாகும். இது இன்று புலம்பெயர் தேசம் எங்கும் மீள் வலியுறுத்தப்படுகின்றது. இவற்றை நன்கு உணர்ந்துள்ள சர்வதேசப் பிணக்குகளுக்கான அமைப்பு இப்படியான கருத்துக்களை ஏற்படுத்த முயல்வது கண்டிக்கத்தக்கது.

ஈழத் தமிழர்கள் பற்றியும் ஈழத் தமிழர்களின் தேசியத் தாகம் பற்றியும் நன்று அறிந்த சர்வதேசப் பிணக்குகளுக்கான அமைப்பு 'இப்போது தமிழீழ மக்கள் தம் புனர்வாழ்வுகளையும் அபிவிருத்திகளை பற்றி மட்டுமே கவலைப்படுவதாகவும் தமிழீழம் பற்றிய அக்கறை அவர்களிடம் இல்லை' என்பதாகவும் தமது அறிக்கையை வெளியிட்டுள்ளனர். புலம்பெயர்ந்த மக்களுக்கும் தாயக மக்களுக்கும் இடைவெளி அதிகரித்துள்ளதாகவும் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். 'எமக்கு ஏற்பட்ட பாரிய தோல்வியின் பின்னர், எம் சுதந்திர உணர்வு மங்கிவிட்டதாக' கூறியிருக்கும் சர்வதேசப் பிணக்குகளுக்கான அமைப்பு முற்றுமுழுதாக யதார்த்தத்தை உணர மறுத்துள்ளது. ஆயுதப் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டாலும் தமிழர்களின் தமிழீழ சுதந்திர தாகம் என்றும் அடங்கிவிடவில்லை என்பதற்கு தமிழீழ மக்களின் ஜனநாயக ரீதியிலான, சர்வதேச ரீதியிலான தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்றிருப்பதே சான்றாகின்றது.

சிறீலங்கா இனவெறி அரசிற்கு வக்காலத்து வாங்கும் சர்வதேசப் பிணக்குகளுக்கான அமைப்பு சிறுபான்மைத் தமிழர்கள் தமது நலன்களைப் பெற நீண்ட காலம் காத்திருக்க வேண்டும் என்றும் அரசியல் தீர்வுகள் ஏற்பட நீண்ட கால அவகாசம் வேண்டும் என்றும் கூறுகின்றனர். நீண்ட கால காலனித்துவத்திடமும், நீண்ட கால இனவெறி அரசுகளிடமும் போராடிய தமிழினம் இன்னும் சில நூற்றாண்டுகள் காத்திருக்க வேண்டும் என்பதுதான் இவர்களின் கருத்துப்போலும்?

ராஜபக்சக்களும் இதனையேதான் விரும்புகின்றனர். காலம் தாழ்த்தப்பட்ட போராட்டங்கள் வீரியம் இழந்துவிடும் எனும் இவர்களது சித்தாந்தம் இன்று புலம்பெயர்ந்த மக்களால் சிதைக்கப்படும்போது சிறீலங்கா அதிர்ச்சிக்கு உள்ளாவது எதிர்பார்க்கத்தக்கதே.

இதே போராட்ட முனைப்பை மழுங்கடிக்க இந்தியா பலமாக களமிறங்கியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சம்பந்தர் மூலமாக நேரடியாகத் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து தனது டில்லி ஆட்சிப் பீடத்திலேயே முகாம் அமைத்துக்கொடுத்துள்ளது. சம்பந்தரும் தம் பங்குக்கு அவர்கள் ஆட்டும் நூலுக்கு வித்தை காட்டியபடி தமிழர் என்றுமே பிரிந்து செல்ல விரும்பவில்லை என்றும் தமிழீழம் எமது கோரிக்கையும் இல்லையென்றும் ஏதோ பிச்சை கேட்கும் அளவிற்கு ஆட்சியதிகாரம் தந்தால் போதும் என்று தானே தமிழர்களின் தனிப் பிரதிநிதி போல் புலம்பத் தொடங்கியுள்ளார்.

விடுதலை உணர்வுமிக்க மக்களிடம் இந்த வித்தைக்காரர்கள் விளையாட்டு செல்லப்போவதில்லை. இந்தியாவின் ஆட்டுவிக்கும் கயிறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தாண்டி புலம்பெயர்ந்த தேசம் வரை நீண்டு வந்துள்ளது. இங்கு நடக்கும் ஜனநாயக, அரசியல் நகர்வுகளை திசை திருப்ப எம்முள்ளேயே தம் கைத்தடிகளைச் செயலில் இறக்கியுள்ளது. இன்று தமிழீழ தனியரசுக்கான நடவடிக்கைகளில் இருந்து மக்களை திசை திருப்ப புத்திஜீவிகளின் துணையோடு பலர் களம் இறங்கியுள்ளனர்.

இந்த செயற்பாடுகள் நன்றாகவே மக்களை சோர்வடையச் செய்யப் பயன்படுத்தப்படுகின்றது. முள்ளிவாய்க்காலோடு தமிழர் இருப்பைக் கேள்விக் குறியானதாக ஒரு மாயையை நன்கே விதைக்கத் தொடங்கியுள்ளனர். எனவே இதிலிருந்து தெளிந்து வந்து தமிழீழத் தாகத்தை விடுதலைக்கான பயணத்தை மேற்கொள்ள வேண்டிய பணி புலம்பெயர்ந்த மக்களிடையே உள்ளது.

சுதந்திர தமிழீழ தனியரசு என்ற அச்சை விட்டு விலகியோடும் தேர்கள், இடைவழியில் தெருவிலேயே நின்றுவிடும்.

**- சோழ.கரிகாலன்**